பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் [redacted] குருகுலத் தாள்

446

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குந்தலம், மாம்பாக்கம்; செய வைகாசி, உ௯ 11—6—54 தளிர்-34

## வழிபாடு (கோயில்)

31 JUL 1954

குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே.

(அப்பர்)

மக்களிடத்தில் நல்லெண்ணமும் தீய எண்ணமும் பிறக்கிறது. முன்னையது பெருகியும் பின்னையது அருகியும் வந்தால் வாழ்வு சிறப்புறும். அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தில் நல்லெண்ணத்தைப் பெருக்கும் வாய்ப்பு மிகச் சிலர்க்கே கிடைக்கின்றது. தீய எண்ணப் பெருக்கினின்று விடுதலையடையவே மக்கள் விரும்புகின்றனர். முயல்கின்றனர்; அறிஞர்கள் நல்லெண்ணப் பெருக்குக்கென்று ஓர் அமைப்பு கண்டனர். அதுவே 'கோயில்'

ஒருவர் ஒரு திங்கள் கோயிலுக்கும் மற்றொரு திங்கள் கோர்ட்டுக்கும் போய் வருகிறாரெனின், எது நல்லெண்ணத்தைப் பெருக்கும்? எச்சமயக் கோயிலும் இவ்வறு பவத்தை உண்டாக்கும். கோயில் எச் சமயத்தினதாயும், எந் நாட்டினதாயும் எச் சமூகத்தினதாயும் ஆகா. அதுதானும் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கென்று ஏற்பட்டதென்க.

கோயில் வழிபாடு ஆங்காங்கே முறைப்படி நடைபெற்றுவரின் மக்கள்பால் நல்லெண்ணம் பெருகும். அதனால் குடும்பம், ஊர், கோட்டம், உலகம் எல்லாம் நல்லதாகும். எங்கும் அமைதி நிலவும். சகோதர நேயம் ஓங்கும், கலைகள் வளரும். ஆண்டன் அருளே ஆட்சி புரியும் இத்தணைச் சிறப்பு வாய்ந்த கோயில்வழிபாடு குன்றினால் உலகம் என்னும்? எங்கணும் தீய எண்ணப் பேய் ஆட்சி புரிந்து போராட்டத்தைப் பெருக்கி இன்னலைக் கொடுக்கும் அவ்வின்னலைப் போக்கவும் வழிபாட்டையே கடைப்பிடித்தல் வேண்டும். வழிபாடே சிறந்த யோகம்; தவம்.

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—
குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| இலை | செய, வைகாசி, | தளிர் |
|---|---|---|
| 6 | 11-6-54 வெள்ளி. | 34 |

## இந்தியாவைக் கிறித்துவ மயமாக்குதல்

"இந்தியா முழுவதும் கிறித்துவ மயமாகும் நாளை எதிர்நோக்க வேண்டுமென்று ஒவ்வொரு கிறித்தவனுக்கும் கிறித்துவ சமயம் ஆணையிடுகிறது" என்று 22-5-54 அன்று சென்னைக் கோட்டை மாதா கோவிலில் நடந்த கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய திரு இராஜப்பா டி. பால் தெரிவித்திருக்கிறார். இவ்வாறே இந்நாட்டிலுள்ள எல்லாச் சமயத்தவரும் கூறுவாராயின் இந்நாட்டின் நிலை என்னாகும்?

இந்தியா மாற்றார் ஆட்சிக்கு அடிமைப்பட்டு தனக்குரிய நாகரிகம், சமயம், கலை, கல்வி ஆகியவற்றில் நிலைதாழ்ந்து அண்மையிலேயே விடுதலை அடைந்தது. இந்நாளில் இந்தியா முழுவதையும் தம்முடைய சமயத்தில் சேர்த்துவிட வேண்டுமென்ற கனவோடு இந்நாட்டை இடைக்கால (Medieval age) நிலைக்கு எவரேனும் கொண்டு செல்ல முயன்றால் அவர்கள் நாட்டுக்கும், சமயத்திற்கும் தீங்கு செய்தவர்களாவார்கள்' முன்னேற்றத்திற்கு உழைக்கத் தொடங்கிய இந்நாட்டின் நினைவைச் சமயப் பூசல்களில் ஆழ்த்தி அதன் வளர்ச்சிக்குத் தடை செய்தவர்களாவார்கள்.

தம்முடைய கொள்கைகளை உலகம் முழுவதும் பரவ வேண்டுமென்று அரசியலார் சிலர் கருதுவதன் விளைவை நாம் கண்டு வருகிறோம். எவ்வளவு வெறுப்புணர்ச்சியும், ஐயப்பாடும், அச்சமும், அமைதியின்மையும் இதனால் உண்டாகின்றன!

உலகம் முழுவதையும் தாமே ஆள வேண்டுமென்ற பேராசை கொண்டு ஆசியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய மங்கோலியர் எத்தனை ஆயிரம் ஆயிரம் உயிர்களைக் கொன்றனர்! அதே ஆசையால் அலெக்சாந்தர், நெப்போலியன், இட்லர் ஆகியோர் வன்செயல்களுக்கு ஓர் அளவும் உண்டோ?

அரசியலைப் போலவே சமயத் துறையிலும் உலகமெல்லாம் தம் கொடி ஒன்ற வேண்டுமென்று நினைப்பதும் வன்செயலேயாகும். அது மற்றவர் உரிமையைப் பறிப்பதாகும். அதோடு சில நலன்களைக் காட்டி எளிய மக்களை மயக்கிச் சமய மாற்றம் செய்வது கொடிய வஞ்சனையாகும்.

இறைவன் திருவருள் ஒரு சமயத்தில் மட்டும் குவிந்துவிடவில்லை. அது எல்லாச் சமயங்களிலும் உண்டு. இன்றேல் பல சமயங்கள் இவ்வுலகில் தோன்றுதற்கு வழியில்லை. எல்லாச் சமயங்களிலும் உண்மையுண்டு. அவ்வாறே எல்லாவற்றிலும் குறைபாடுகளும் உண்டு. ஒரு சமயத்தவர் மற்றவரைத் தாழ்த்திக் கூறுவது இறைவனையே பழிப்பதாகும். எனவே, சமயப் பண்பை ஒட்டியும் நாட்டின் நலனைக் கருதியும், கிறித்துவ நண்பர்கள் தம்முடைய ஆசையைக் கைவிட வேண்டும். அவ்வாறே மாறிவிட்ட இந்தியர்களை மீண்டும் இந்நாட்டுச் சமயத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று முயலும் இந்து மகா சபையினரும் தம்முடைய நோக்கத்தை விட்டுவிட வேண்டும். மாற்றங்கள் எல்லாம் நம்மைப் பிற்காலத்திற்கு இழுத்துச் சென்று நம் வளர்ச்சியைத் தடைப்படுத்தும்.

மக்கள் பலதரப்பட்ட நிலைகளிலிருந்து வளர்ச்சி பெற்று வருபவர்கள். அவர்கள் எண்ணமும் போக்கும் ஒரு நாளும் ஒன்றாக இருந்ததே இல்லை. இருக்கப் போவதும் இல்லை. ஒன்றுபடுத்த முயல்வது வெற்றுச் செயல்.

எல்லாச் சமயத்தவரும் அவரவர் கொள்கைகளின்படி ஆண்டவனை வழிபடும் உரிமை அனைவர்க்கும் இருக்க வேண்டும். இதனை இந்திய அரசியலமைப்பு நமக்குக் கொடுத்துள்ளது. அவ்வுரிமையை இந்தியர் கண்ணுங் கருத்துமாகக் காத்துக் கொள்ள வேண்டும்.

காந்தியடிகள் தெரிவித்தபடி மாற்றங்கள் செய்வதை விடுத்து, அவரவர் சமயங்களிலுள்ள நல்ல கொள்கைகளின்படி நடந்து கொள்வதாலேயே தத்தம் சமயங்களுக்கு உண்மைத் தொண்டு செய்தவர்களாவார்கள்.

—மெய்கண்டான்

# விஞ்ஞான விளக்கமும் மெய்ஞ்ஞான மேன்மையும்

(வே. ந. நாராயணன்)

(முன் தொடர்ச்சி)

அஃதே போன்று அம்மணமாக வாழ்ந்த மனிதன், மரப்பட்டையை உடுத்தியதோடு நின்றிருந்தால் இன்றைய நூலாடைகளையும் பட்டாடைகளையும் கண்டிருக்க முடியாது. நாகரிகம் வற்புறுத்தும் அவ்வாடைகளின் அவசியத்தையும் உணர்ந்திருக்க முடியாது.

ஆனால் மரப்பட்டையை உடுத்தவன் இலைகளையும் தழைகளையுங் கூட உடுத்த ஆரம்பித்தான் பின் தோலாடைகளையும் கட்ட முற்பட்டான்.

ஆசையின் இத்தகைய அடிப்படை மாற்றமே சட்டை, வேட்டி, சேலை, துண்டு போன்ற பல பிரிவுள்ள நூல்பட்டு ஆடைகளைக் கண்ட புறநாகரிகத்திற்குக் கடைகாலாய் அமைந்தது.

எந்த விதத்திலாவது உடலை மறைக்கத் தெரிந்துகொண்ட மனிதன் 'ஆசை பூர்த்தி செய்யப்பட்டது' அதோடு திருப்தி அடைந்திருக்கலாம். ஆனால், இல்லை; மேலும் ஆசையாகிய எண்ணம் எழுந்தது, வளர்ந்தது.

உடலை மறைக்கும் அந்தப் பொருளையே அந்த ஆடையையே பலவிதமான முறைகளில் (Fasion) தைத்து அணிந்தான். இந்த ஆசையின் இறுதியில் சரி தவறு தேர்ந்து காணப்பட்டுள்ளமையான், அறிவும் உடன் சேர்ந்ததென அறிக.

அக்கால கதிலையுங் கூடத் தனித்த ஆசையே வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்ததெனினும், அதனுடன் சுயநல எண்ணமும் ஒன்றியது. இவ்விரண்டும் போட்டியிட்டுக் கொண்டு மாறி மாறி வளர்ச்சிக்கு உதவின.

மனிதனின் சுயநல மனப்பான்மையும் புதுமைகட்கு, வளர்ச்சி நிலைகட்கு ஆதாரமாய் அமைந்தது.

கால்களினால் நடந்து சென்ற மனிதன் இன்று காற்றுவேகத்தினுங் கடிது செல்லும் ஆகாய விமானத்தில் செல்லுமளவுக்கு மாற்றங்கண்டான்—முன்னேற்றங் கண்டான்.

மற்ற உயிரினங்களைப் போல் மனிதன் ஒரே தன்மையில், ஒரே நிலையில் வாழ்பவனல்ல மாற்றங் கண்டுகொண்டே இருப்பவன் வளர்ச்சி அடைய விழைபவன்.

ஒரே நிலையில் எக்காலமும் வாழ மனிதனால் இயலாதெனவுங் கூறலாம். மனம் இருக்கின்ற காரணத்தால்.

கால்களினால் நடந்து சென்று பழக்கப்பட்ட மனிதன் பின் அதை வெறுத்தான் மாற்றங் காண விழைந்தான், புதுமை காண அவாவினான் அத்தகைய அவாவிற்கு ஊக்கியாய் அமைந்தது தூண்டலாய் நின்றது சுயநலமாகும்.

நடந்து செல்வதில் உடற்கட்டமும், கால விரயமும் ஏற்படுவதை அறிந்தபோது, சுயநலம் பாதிக்கப்படுகின்றது எனக் கண்டபோது அதற்கொரு வழி வகை செய்யாமலிருக்க முடியவில்லை அதன் காரணமாகத்தான் அச்சுயநலத்தின் அவசியத்தால்தான் மிருகத்தின் மீதேறிச் சவாரி செய்யும் புதுமையை, ஏற்ற முறையீட்டைக் கண்டான்.

சில காலத்திற்குப்பின் சவாரி செய்வதிலும் வெறுப்பு, இதிலுங் கூட சுயநலம் பாதிக்கப்படுறது என்பதை அறிந்தபோது, வெயிலும் மழையும் தாக்குகிறது என்பதைக் கண்டபோது, அறிவின் துணைகொண்டு மூடியிட்ட மாட்டு வண்டியைக் கண்டான் அதோடு திருப்தியில்லை; மேலும் ஆசை, இதனினும் வேகமாகச் செல்லும் வண்டியைக் காண வேண்டுமென முயன்றான். தேவையும் உடனேற்பட்டது. இவ்வாறு ஆசையும் சுயநலமும் இணைந்து எழ எழ அறிவின் துணைகொண்டு பலப் பல புதுமைகளைக் கண்டுகொண்டே இருந்தான், இருக்கின்றான். இனியும் காணுவான்.

தன் சக்தியை எவ்வளவுக்கெவ்வளவு வெளிப்படுத்த முடியுமோ அவ்வளவிற்கவ்வளவு வெளிப்படுத்த முயலுகின்றான்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# ஆவுந் தமிழரும்

(ஞா. தேவநேயன்)

எல்லா நாட்டிலும் எந்நிலை நாகரிகத்திலும் ஆவானது அருமையாய்ப் போற்றப் படுவதேயாயினும், தமிழ் நாட்டில் அது தலைசிறப்பப் போற்றப் பட்டதென்பது எவரும் மறுக்கொணாதது.

ஆரியப் பார்ப்பனர்கள் ஆக்கொடையையே மிகுதியாய் விரும்பிப் பெற்றமையானும், ஆவோடு சேர்த்து வாழ்த்தப் படும் அந்தணரை ஆரியப் பார்ப்பனரென்று இடைக்காலத்திற் பிறழ வுணர்ந்தமையானும், ஆவுக்குத் தமிழரோடுள்ள தொடர்பினும் ஆரியரோடுள்ளது மிக்கதென்று தவறாகக் கருதப் படுகின்றது. வடமொழியாரியர் சிந்து வெளிக்கு வந்த புதிதில் முல்லை நாகரிகத்தையே அடைந்திருந்தமையால், அவருக்கு ஆத்திணை இன்றியமையாததா யிருந்திருக்கலாம். ஆனால், இதனால் தமிழர்க்கு ஆத்தொடர்பு தொன்று தொட்டதென்னும் உண்மை வலிமை குன்றாது.

மக்கள் நாகரிகம் குறிஞ்சி, முல்லை மருதம், நகரம்என நான்கு நிலைகளையுடையது. அவற்றுள் குறிஞ்சியிலேயே தமிழர்க்கு அல்லது தமிழரின் முன்னோர்க்கு ஆத்தொடர்பு இருந்திருத்தல் வேண்டும் ஏனெனில், ஆவானது முதன்முதல் குறிஞ்சி நிலத்திற்கே யுரிய விலங்காம். குறிஞ்சியை யடுத்த முல்லை நிலத்திலிருந்த ஆயர் ஆட்டையும் மாட்டையும் பெருவாரியாய் வளர்த்து அவற்றின் ஊனையும் பாலையும் உண்டு வாழ்ந்தனர். அவர் ஆட்டினும் மாட்டையே சிறப்பாய் வளர்த்தனர். ஆவை மேய்ப்பவர் ஆயர் எனப் பெயர் பெற்றமை கவனிக்கத் தக்கது.

ஆ என்னும் பெயர் தற்காலத்திற் பெண்பாலையே குறிப்பினும், முற்காலத்தில் இருபாற்கும் பொதுவா யிருந்தது. இது னகரச் சாரியை பெற்று ஆன் எனநிற்கும். "ஆவார் கொடியாய்" (திருவிளை நரிபரி 19) "பெற்றமும் எருமையும் மரையும் ஆவே" (தொல் 1560) 'ஆன் முகத்த னடற்கணாயகன்' (கந்த. பானு 95) ஆன்–எருமை பெற்றம் மரை இவற்றின் பெண் (திவா) ஆடு, மான், மரை, மிளா, கடமை, மாடு என்பவை முறையே ஒன்றினொன்று சிறிது வேறுபட்ட இனமாம். மா என்பது விலங்குப் பொதுப் பெயரா யுங் குதிரைப் பெயராயு முள்ளது. குதிரை மானைப்போல வேகமாய் ஓடக்கூடியது; வடிவிலும் ஓரளவு அதை ஒத்தது, மா என்பது னகரச் சாரியை பெற்று மானையுங் குதிரையையுங் குறிப்பதுடன், விலங்குப் பொதுப் பெயராயுமிருக்கும் கடமா (கடம்–மா) என்பது காட்டாவிற்கும் காட்டெருமைக்கும் பெயர். இதனால், ஆ என்னும் பெயருக்கும் மா என்னும் பெயருக்கும் ஓர் இயைபிருப்பதை உணரலாம் இவ்விரண்டும் னகரச்சாரியை பெறுவதும் இங்கு நோக்கத் தக்கது.

மா என்னும் பெயரே ஆ என்று திரிந்திருக்கலாம். மா அ என்று மூக்கொலியிடும் மாடு மா வெனப்பட்டது. மா- ஆ; மான்- ஆன் மா- மான்- மாடு ஒப்பு நோக்க; கா- கான்- காடு ஆ- அவன்- வாடு (தெ) ஆ என்பது முதலில் மாடு என்று பொருள் பட்டுப் பின்பு பசுவிற்கு வரையறுக்கப்பட்டது.

"கேடில் விழுச் செல்வங்
கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

**E Pecuniary–relating to money & Pecunia – money pecudes (pl) – Cattle,**

மக்களுக்கு முல்லை நிலத்திலேயே உழவு தோன்றிற்று; அது மருத நிலத்திற் சிறப்படைந்தது. முன்னதில் புன்செய்ப் பயிரும் பின்னதில் நன்செய்ப் பயிரும் விளைக்கப்பட்டன. மாடு இருநிலத்தார்க்கும் ஊனும் பாலும் உதவியதுடன், இருவகை வேளாண்மைக்கும் உழுதிறைத் துதவியது

"பகடு நடந்த கூழ்"

என்றார் நாலடியார்.

மாட்டின் ஊனும், பாலும் மட்டுமல்ல; தோல், கொம்பு, உரசனை (ரோசனை), வால் மயிர் சாணம் முதலிய பிறவும் பயன் பட்டன. வீட்டைத் துப்புரவு செய்யவும் அடுப்பெரிக்கவும் பயிருக்கு உரமிடவும் சாணம் உதவுவது சிறந்த உணவும் மருந்து மாகிய தயிரும் மோரும் வெண்ணெயும் நெய்யும் பாலிலிருந்தெடுக்கப்படுவன. இங்ஙனம் உணவை விளைவிப்பதும் தானும் உணவளிப்பதும் வேறு பலவகை உதவுவதுமாகிய மாட்டினத்தைச் செல்வமாக மட்டுமன்றி மக்கள் போலுங் கருதி வந்தனர் முன்னைத் தமிழர். (பால் முதல் நெய்யீறாக உள்ள ஐந்தும் ஐயமுதம் (பஞ்சாமிர்தம்) எனப்படும். இவற்றுள் இரண்டை விலக்கி அவற்றிடத்தில் ஆநீர் ஆப்பி என்பவற்றைக் கூறுவது, தமிழர் கொள்கையறியாத புராணிகர் கூற்று என்பர் குடிசைக் கிழார் அ. சிதம்பரனார்.)

(வளரும்)

# அன்னையின் அறவுரை

'மூர்த்தி'

இனிய மாலை வேளை. தென்றல் தவ்வென்றசை இயது. அலர் கதிர் ஞாயிறு அமைதியாக மறைகின்றான். செவ்வானம் பொலிகிறது. செம்மை மட்டுமல்ல, பற்பல நிறங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன. இருபுறமும் மேகம் குவிந்து எழுந்து நீலக் குன்று போல காட்சியளிக்கின்றது. மலையைச்சுற்றி வெள்ளிப் பட்டம் அடிக்கப்பட்டிருக்கிறது. நாலா பக்கமும் மரம்—செடி கொடி மரத்தில் இளந் தளிர். செடியில் அழகிய மொட்டுகள் கொடியில் நறுமண மலர்கள்; வானத்தில் வானவில். பறவைகள் கூட்டங் கூட்டமாய்ப் பறக்கின்றன உருவத்தால் சிதைந்தாலும் உள்ளத்தால் ஒன்று பட்டிருப்போம் எனக் கூறும் அழகிய பரந்த மணல் வெளி கீழ் அழகிய வாய்க்கால் நீர் விர்ர்....... என்று ஓடுகிறது. எங்கும் அமைதி. எதிலும் அமைதி. இயற்கை தன் கடமையைச் செய்து கொண்டே இருக்கிறது. நான் தனியே நிற்கிறேன், எங்கும் பச்சைப் புல் தரை இத்தனைக்கும் நடுவே சிறு சிறு முட்புதர்கள் புதர் நடுவே ஒரு நறுமண மலர். பெரியோர் உள்ளம் பழித்த நீர் நிறைந்த குளம் தடாகத்தைச்சுற்றித் தென்னஞ் சோலை; ஓர் மருங்கு மணம் நிறைந்த தாழைப் புதர் தன் இதழாகிய வாள்களை ஏந்திக் காவல் செய்கிறது; இன்னும் பற்பல காட்சி. யாவற்றையும் காண்கிறேன் தலை சுழல்கிறது. மயக்கம் வரும்போல் இருக்கிறது. தடுமாறினேன். ஆ! சாய்ந்தேன். புல் தரையில் கண்மூடி மௌனியானேன்.

முடிக்கும் புவனங் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியம். ஆம் அன்னை போல்வாள் எதிரே நின்றாள். தாமரைத் தடாகத்தில் தன் முகத்தைக் காட்டிக் கையையும் ஆம்பல் வாயையும் தோற்றுவித்தாள். வானில் கருமேகத்தில் தன் கூந்தலைக் காட்டினாள். புது வெள்ளப் புனரியில் தன் கண்களைக் காட்டினாள். அவள் மேனி செவ்வானில் பொலிகிறது. அவள் குறங்குகள் வெள்ளத்தில் வாழைகளாகத் திகழ்கிறது.

இங்ஙனம் காட்சியளித்த 'அன்னை குழந்தாய் என் வாட்டம்'' என்றாள். "அன்னையே எல்லாம் நின் மயக்கந்தான்'' என்றேன். "நானா மயக்கினேன்'' என்றாள். "அன்னையே நீ மயக்கவில்லை: நின் எழில். மால் வந்தார் தன் நீலமேனி தோற்றது என்று மேகத்தைக் கண்டு மயங்கினார், அவர் மயக்கம் பிடித்தவர் என்றால், எவரையும், எங்கும், எப்படியும் மயக்கும் அவனை மயக்கியவள் நீதான்' அவனும் மயங்கினான். படைக்கும் நான்முகனோ "என் படைப்பிலா இவ்வளவு எழில்'' என மயக்குறுகிறான். இவர்கள் வானவர்களென்றால் "இந்த எழிலை எவைகளைக் கூட்டிப்படம் எழுதுவேன்'' என அயர்ந்தார் இரவிவர்மா இன்னோரன்ன பெரியோர்களே மயங்கினர் என்றால் அடியேனை மயங்கக் காரணம் வேண்டுமோ? என்றேன்.

"அப்பா நான் உன்னை மயக்க மாட்டேன். அன்னை பிள்ளையைத் துன்புறுத்தல் உண்டா! ஆனால் தீயவர்களோடு சேர்ந்து உழலும் பிள்ளையைத் தாய் திருத்த முயன்றால் அவள் துன்புறுத்துகிறாள் என்று பிள்ளை எண்ணுவது வழக்கமே, அது போல யான் மாயை என்னும் தாய். உனது நலத்திற்கு உழைக்கவே இறைவன் என்னைப் படைத்தான். உன்னைக் கட்டியது ஓர் ஆணவம். அதை அவிழ்க்க முற்படு அதனை அவிழ்க்க நானும் உனக்குதவ முற்படுகிறேன்'' என்றாள்.

"அன்னாய்'' என்ன கூறினாய்? என்னைக் கட்டியிருப்பது ஆணவமா? நான் சும்மாதானே இருக்கிறேன். ஒன்றும் என்னைக் கட்டவில்லையே, கயிற்றைக் காணோமே என்றேன்.

"அப்பா அது கயிறல்ல கண்ணால் காண, அதனை நினைத்துப் பார்க்க உன்னால் முடியாது. அது உன்னை மறைத்து நிற்கிறது. வண்ணான் துணியை வெளுக்கிறான். ஆடை முன்னர் அழுக்குடையதாக இருந்தது. மேலும் சாணி, உவர்மண் முதலிய அழுக்கைப் போட்டுக் கசக்குகிறான். பின் துணியை வெளுக்கிறான். துணி வெண்மையாகி விடுகிறது. இது என்ன மாய வித்தை? பார்த்தாயா? அது போல ஆணவம் முன்னரே உன்னைப் பிடித்த அழுக்கு. யான் அதனை நீக்க வந்த அழுக்கு. முன்னது தீமை செய்யும். பின்னதாகிய நான் நின் நலமே கருதி வாழ்கின்றேன். என்னைப்புரிந்து

கொள்பவர்கள் என்னை ஆளுகின்றார்கள். புரியாதவர்கள் ஆளப்படுகின்றார்கள். நீ ஆணவக்கட்டினின்றும் விடுபட்டால் என்னை நீ நன்றாக அறிவாய். மகனே! எழுந்திரு. அகந்தையை விடு" என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

"அம்மா நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே" என்றேன்.

"மகனே அதனைப் புரியவொட்டாதடிப்பதும் ஆணவமே" என்றாள்.

"ஆணவத்தை நீக்க வழி" என்றேன்.

விழியால் அருள் சுரந்த அன்னை "மகனே! அகந்தையை விடு; யாவும் இறைவன் செயலென எண்ணு; கடமையில் தவறாதே உலகுக்குத் தொண்டனாகு. இறைவன் தொண்டரைத் தானே தூய கருணையால் சேர்ப்பான் இதுவே உனக்கு அறவுரை என்றாள்.

இயற்கையன்னை முல்லை அரும்பில் புன்முறுவல் பூத்தாள். "யான் எப்போதும் எங்கும் இருப்பேன் என்னை உய்த்துணர் கவனிப்போர்க்கு வெளிப்படுவேன். வேண்டியபோதெல்லாம் நீ என்னுடன் பேசலாம்" என்று மொழிந்தாள் நல்லது என்று கூறினேன்.

'தம்பி எழுந்திரு' என, என தருமை அன்னையின் குரல் "என்ன பிதற்றுகிறாய்" என்று கேட்க, விழித்து எழுந்த நான் "ஆ அம்மா! நான் பிதற்றமாட்டேன் நானா பிதற்றுவது" என்று ஆணவமும் வெட்கமும் எதிரொலிக்க உடனே 'இயற்கையன்னை புத்தகமே இன்பம் நோக்கின் — பயக்கும் அறிவுப் பழம்" என்ற சுத்தானந்தரின் வாய்மொழியை முணுமுணுத்த வண்ணம் சென்றேன்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய அடிப்படை மாற்றமே இன்றைய விஞ்ஞானத்திற்கு வித்தாயமைந்தது.

இன்றைய அளவில் அவ்வாசை தேவையின் "துரிதப் போக்கின்" எல்லை மணிக்கு ஆயிரக் கணக்கான மைல்கள் செல்லும் ஆகாய விமானமாகக் குறிக்கப் பட்டிருக்கின்றது. மேலும், எல்லை விரிவடையவுங் கூடும்; மாற்றி பமைக்கவுங் கூடும்.

இத்துடன் ஆசைமுடிந்துவிட்டதென்றோ சுயநல் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதென்றோ கூறிவிடமுடியாது எப்போதும் ஆசை இருந்துகொண்டே இருக்கும், தேவை வளர்ந்துகொண்டே இருக்கும், மனிதனுக்கு இறைவனால் படைக்கப்பட்ட மனம் இருக்கும் வரையில் பகுத்தறிவு அழியும் வரையில்.

அறிவும், அதன் ஆதியான ஆசையும், தன்னலமுமான இம்மூன்றும் வளர்ச்சி நிலையில் ஒன்றையொன்று தொடர்புற்று ஒன்றேயாக நின்றாலும்; சிற்சில சமயங்களில் ஒவ்வொரு மனப்போக்கே பெரும்பாலும் காணப்படும். பிரதான, அம்சமாக நிற்கும், மேலோங்கி நிற்கும்.

உள்ளச் செயலாகிய அறிவு, உணர்ச்சி, முயற்சி எனும் மூன்றமிசங்களும் ஒவ்வொரு செயலி [illegible] சில செயலில் முயற்சியமிசம் தூக்கலாகவும், சில நிலைகளில் உணர்ச்சியமிசம் மேலோங்கியும், சிலவற்றில் அறிவு அமிசம் பிரதானமாகவும் இருப்பதை உதாரணமாகக் கொள்க.

(பொதுநலம் பாதிக்கப்படாது தன் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதை சுயநலமென ஆன்றோர்கள் கூறுவதில்லை. தீமையை உண்டுபண்ணுக விருப்ப எண்ணத்தை ஆசையெனவும் கூற முனைவதில்லை அறிவென்றே கருதுவர்.

அவர்கள், பொதுநலம் பாதிக்கப்பட்டுத் தன் தேவையைப் பூர்த்தி செய்துக் கொள்வதைத் தான் சுயநல மென்றனர். தீமையை உண்டுபண்ணு விருப்ப எண்ணத்தைத்தான் ஆசையென விளம்பினர். என்றாலும், விளக்கவேண்டியுள்ளதால் அந்தந்த நிலையிலேயே ஆராய வேண்டியதாயிற்று.)

சில வளர்ச்சி வகைகட்கு அறிவும் அதன் ஆதிப்பிரிவான சுயநலமும் உதவிய போதிலும் அறிவின் மற்றோர் பிரிவான ஆசையே பிரதான இடத்தையும் முதலிடத்தையும் பெற்று விளங்குகின்றது.

(வரும்)

**Phone 55034 Tel Enkayan**

**கைத்தறி ஆடைகளில்**
**சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்**




**பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்**

கருப்பன் செலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# வீர வாழ்வு

[நா. சு. மணியன்.]

மனித இனம் விழிப்புற்ற நாள் முதலாகத் தனக்கு மேற்பட்ட ஒன்றை நாடி வந்திருக்கிறது. ஒளி, ஞானம், இன்பம், அமரத்துவம்—இவைகளை—கனன்று எழும் அந்த ஆர்வத்தின் பல வேறு இசைகளாகத் திகழ்கின்றன. மறைந்தழியும் உலகிலே தோன்றிய மனிதன் அழியாத வாழ்க்கையை விழைகின்றான்; ஆபாசம் மலிந்த உலகில் வந்த அவன் அழகின் ஊற்றைப் பருக எடுக்கிறான். மின்மினி போலும் தனது அறிவைக் கொண்டு வாழ்வின் ஆழத்தையும் விளக்கப் புகுகிறான்.

எல்லையில்லாப் பரவெளியில் நட்சத்திரங்களும், வெளியும் மோனத்திளைந்த எல்லை காணா அண்டத்தில் ஏதோ அணுப்போன்ற பூமியில் வந்த மனிதன் கோடி கோடி ஆண்டுகளையும் பொருட்படுத்தாத ஒரு உலகத்தில் ஒரு நூற்றாண்டே உயிர் வாழும் மனிதன், தன்னை அற்பனென்று எண்ணாமல், மண்ணிலே மறையும் ஒரு புழு என்று உணர்ந்து தன் உண்மையான உருவத்தைத் தேடியறிய முயன்று வந்துள்ளான். இதுவே சமயம், யோகம், ஞானம், பக்தி ஆகிய எல்லாவற்றினுடையவும் அடிப்படையாக விளங்கி வந்திருக்கிறது.

இன்றைய உலக நிலை கலக நிலை. அறிவுள்ளம் படைத்த மேதைகளின் உள்ளமெல்லாம் இந்நிலையைக் கண்டு துடிக்கின்றது. ஆனால் உலகம் இன்று மேனாட்டின் அற்புத விஞ்ஞான வெற்றியின் மேன்மையைக் கண்டு வியக்கிறது. விஞ்ஞானத்தை ஒதுக்க வேண்டியது இல்லை. அது வாழ்வின் முழுமைக்கு வேண்டிய சக்தியை மனிதனுக்குத் தந்தது. மனித வாழ்விற்கு வளமும், சக்தியும், இயற்கையை வென்றதற்கு ஆற்றலும் தந்த விஞ்ஞானிகளுக்கு நமது நன்றி உரித்தாகுக. ஆனால், விஞ்ஞானம் மனிதனுடைய வெளி வாழ்வையன்றி உள்நிலையை அறியாது. உளநூல் முதலிய அறிஞரும் இப்போது தான் மனிதனின் ஆழ்ந்த வாழ்வைப் பற்றிய சில உண்மைகளைக் காண முயலுகின்றனர்.

விஞ்ஞானிகள் புற வாழ்வை மட்டுமே வளம்படுத்தக் கங்கணம் கட்டி நிற்கையில், ஆத்மாவைத் தவிர மற்றவையெல்லாம் மாயமென்று உதறித் தள்ளும் மனப்பான்மை மற்றொரு கூட்டத்தாரிடம் வளர்ந்து வந்தது. வாழ்வுக் கனவு துன்பம் இன்பமெனபது, இவ்வாழ்வை வெறுத்து மனிதன் அடைவதே யாகும் என்ற கொள்கையால் வாழ்வின் இனிய ஊற்று வறண்டது. வறட்டுச் சந்நியாசத்தைக் கண்டிக்கையில் அவர்கள் தேடித் தந்த அத்யாத்மச் செல்வங்களுக்காக ஆயிர ஆயிரம் வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். வெளி மயக்கால் மயங்கிய உலகிற்கு இவர்கள் ஆண்டவனின் அற்புத வாக்குகளைக் கொணர்ந்தனர். இருளில இருந்த மக்களுக்கு அப்பாலுள்ள சோதி வாழ்வின் ஒளியைக் காட்டினர்.

இன்று உலகம் விஞ்ஞானியினுடைய வெளி வாழ்வையும் சந்நியாசியினுடைய உள் வாழ்வையும் அணைத்து அதற்கும் மேலான அத்தியாத்ம சமாசத்திற்குச் செல்லத் தயாராக இருக்கின்றது. வாழ்வு அழகு [illegible]றியது, அறியாமை கலந்தது, துன்பம் நிறைந்தது என்பதெல்லாம் உண்மையே. ஆன்மா தூய அறிவும், இன்பமும், அழகும் நிறைந்து இலங்குகிறது என்பதும் மறுக்கமுடியாத உண்மையே. ஆனால், வாழ்வும் ஆத்மாவும் இணைக்கப்பட வேண்டும். ஆத்மாவின் அன்பு ஊற்றை வாடிக்கிடக்கும் உலகினில் பாய்ச்சுதல் வேண்டும்.

உலகம் பரிணாமத்தின் நிலைக்களன். உலகம் ஒரு போர்க்களம். முன்னேறும் சக்திகளுக்கும் பின்னிழுக்கும் சக்திகளுக்கும் ஓயாத போரையே உலகத்தில் காணலாம். வாழ்வின் அடிப்படை அழியாத உண்மை, அறிவு, இன்ப (சச்சிதானந்தம்) முதலியவற்றில் இருந்த போதிலும் மேல்வாழ்வு ஒரே பிணக்காகவே காணப்படுகிறது. இதில் அஞ்சி ஓடுவோர்க்கு இடமில்லை. கோழைகளுக்கும், தொடைநடுங்கிகளுக்கும் வாழ்வில்லை; வழியில்லை. இயற்கையில் ஓய்வுக்கு நேரமில்லை. இயற்கை 'முன்னேறு' 'முன்னேறு' என மனிதனின் பிடர்பிடித்து உந்துகிறது. வழியிலே தூங்குவோர்க்கும், அது இரக்கங்காட்டுவதேயில்லை. வாழ்வு ஒவ்வொரு கணமும் முன்னேற வேண்டும். இதைக் குறித்தே விவேகானந்தர் "பண்டைய மதங்களெல்லாம் தெய்வத்தை நம்பாதவனையே நாத்திகன் என்றன. தற்போதைய மதமோ தன்னிடம் நம்பிக்கை கொள்ளாதவனை நாத்திகன் என்கிறது" என்று கூறினார். கட்டு வாய்ந்த உடல், எஃகு போன்ற நரம்பு, வயிரம் பாய்ந்த நெஞ்சு, ஆத்மாவோடு ஒன்றி ஒட்டி ஊன்றிய வாழ்வு இவையே மனிதனின் குறிக்கோளாக இருக்கவேண்டும். [illegible] அவர் பறை சாற்றினார்.

"ஆண்டவனை உணர்; உன்னை அறி, மனிதனுக்குதவு; உன்னை அழியாத ஆன்மா என்றுணர், சாவு—துன்பம் இவைகட்கு அஞ்சாதே; ஏனெனில் இவற்றை யெல்லாம் வெல்ல வேண்டும். மேலும், முன்னும், நோக்கி முன்னேறு. மேலே உயர்ந்த ஆத்யாத்ம சமரசங்களை நோக்கியும் சுற்றிலும், ...ாத வாழ்வின் முன்னேற்றத்தையும் செல். உண்மையும், பொய்மையும், முன்னேற்றமும், பின்னேற்றமும் அமர் புரியும் இடமே இவ்வுலகு. உலகு வீரனாகிய உன்னை அழைக்கிறது எழுந்திரு, உதவி செய். அறிவிலை உலகம் முன்னேற வேண்டுமானால் அழிப்பதற்குத் தயங்காதே. ஆனால் வெற்றிக்காக மகிழாதே; மடிந்தோர்க்காக அழுது இயங்காதே; அனைத்தையும் ஆண்டவனென்றுணர்ந்து அவனுடைய கட்டளையைச் செய்" என்ற அரவிந்தரின் வாய்மொழிகளை உன்னிப் பார்த்து வாழ்வோனுடைய வாழ்வே எல்லையற்ற பெருமையுடையது; அவனே உதயமாகும் அமர வாழ்வின் வீரமகன் என்பது வெள்ளிடைமலை.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# திரு. வி. க. வின் வாய்மொழி

நாடு நலம்பெற வேண்டுமா? ஆம் எனில், சாதிச்சண்டை சமயச்சண்டை பிற மூடச்சண்டைகள் அனைத்தையும் கட்டிச் சுருட்டி வங்காளக் குடாக் கடலில் எறிதல் வேண்டும்.

இளமையும் மணமும் கடவுட்டன்மையும் அழகும் உடையதாகவும் இயற்கையை உடலாகவும் கொண்ட ஒரு பொருள் எவர்க்கு உரியது? எவர்க்கு உரியதாகாது? அஃது எல்லார்க்கும் உரியது. அப்பொருளை உணர்தம் ஆக்கை வழிபாடும் எல்லாருங் கொள்ளத் தக்கது. தமிழ்மக்கள் கண்ட பொதுநெறி இதுவே.

பெண்ணைத் தெய்வமாகப் போற்றும் ஒருவன் எக்குற்றத்திற்கும் ஆளாகான் என்பது ஒருதலை.

முன்னைநாள் கவியர் உலகமென்னும் உடலில், பொருளென்னும் உயிரைப் புகுத்தும் முறையைக் கடைப்பிடித்தனர்.

தமிழ்ப் புலவர் பாடல்கள் முருகன் உறையும் அழகுக் கோயில்களாம், பழந்தமிழ் நூல்களைப் படிப்பதும் அழகெனும் முருகனை வழிபடுவதாகும்.

எக்கூட்டத்தவர் எம்மொழியால் போற்றும் எப்பொருளாயினும், அப்பொருட்கண் இறை இயல்புகள் காணப்பெறின் அதைக் கோடலே அறிவுடைமையாகும்.

நீல மேனி தண்மையது. அதைத் தியானிக்கத் தியானிக்க, அது, புலன்களின் வெம்மை, மன வெம்மை, கரண வெம்மை முதலிய வெம்மைகள் ஒழிய, அங்கங்கே தண்மை தங்க, நல்லெண்ணத்தையும் நல்லுணர்வையும் எழுப்பிப் படிவிக்கும்.

# தானமும் - தருமமும்

இயற்பகை

அழகு எல்லார்க்கும் ஒன்று ஆகாது. கண்டாரால் விரும்பப்படும் தன்மையே அதன் இலக்கணம். காப்பு முதலிய அணிகள் கரத்திற்கு அழகு தரமாட்டா. விலங்குகளுள் யானை, யாளி தவிர பிறவற்றிற்குக் கையில்லை. அறிவும் அன்பும் நிறைந்த மனிதனுக்குக் கரங்கள் தரப்பட்டிருக்கின்றன எதற்காக? நூல்களைப் படிப்பதற்கும், கடவுளை அருச்சித்து வழிபடுவதற்கும் அல்லவா! இவ்விரு செயலுக்கும் இடையில் கொடுத்தல் என்ற ஒன்றும் கலந்து நிற்கும். கொடுத்தல் இருவகைப்படும். ஒன்று, கைம்மாறு கருதாது காலங்கருதாது கொடுத்தல். இரண்டு, வரும் பயன் எண்ணிக் கொடுக்கப்படுவோன் தகுதியறிந்து கொடுக்குங் காலத்தை உத்தேசித்துக் கொடுப்பது. முன்னது "தருமம்" என்றும் பின்னது "தானம்" என்றும் கூறப்படும். கொடுத்தலாலாகும் பயன் யாது? பிறர்க்குதவி செய்யும் கையே உயர்ந்த கை என்க. கொடுத்தல் மமகாரத்தை ஒழிக்கின்றது. கொடுக்குங்கால் கடவுளுக்குக் கொடுப்பதாக எண்ணிக் கொடுக்க. எற்போர் உயிரினுள் உயிராய் விளங்கும் இறைவனுக்கே கொடுக்கப்படுவது என்ற எண்ணம் முனைப்பாக இருக்கவேண்டும். போகமாகிய தானமும், ஞானமாகிய தருமமும் உயிர்களின்பால் நிலவின், ஆ! உலகம் ஈடேறுவதில் ஐயமுண்டோ?

"கெடுவாய் மனனே
கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள்
நினைவாய்"

(கந்தரநுபூதி)

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர், வி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். 